செ.வெ.எண்: 651/2016 நாள்: 20.09.2016

# பத்திரிக்கை செய்தி

புதுதில்லியில் உள்ள தேசிய கட்டிட நிறுவனத்திற்கு (National Building Organization) வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டு முதல் வீட்டு வசதி திட்டம் குறித்து சில விவரங்களை சேகரித்து இணையத்தள பதிவு மேற்கொள்ளும் வகையில் தற்காலிக புள்ளிவிவர ஒருங்கிணைப்பாளர் பதவி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானதே. இப்பணிக்கு மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக ரூ.15,000/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேறு ஏதும் படிகள் கூடுதலாக வழங்கப்படமாட்டாது. இப்பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. அதன்படி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு மற்றும் கணினியில் பட்டயப் படிப்பு/சான்றிதழ் படிப்பு முடித்திருக்க வேண்டும். மேலும் 01.07.2015 அன்றைய நிலையில் 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

மேற்படி தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் 30.09.2016-க்குள் மாவட்ட புள்ளிஇயல் துணைஇயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 2-வது தளம், நாகர்கோவில் - 629001 என்ற முகவரிக்கு உரிய கல்வி சான்றின் நகல் மற்றும் சுய முகவரியுடன் கூடிய அஞ்சல் அட்டையினை இணைத்து விண்ணப்பம் அனுப்ப வேண்டும். தேர்வு தேதி உரிய முறையில் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டு தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தகுதியுடைய புள்ளி விவர ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

புள்ளிஇயல் துணைஇயக்குநர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.